**தலைப்பு – 122 ஊடக, தகவல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆம் பகுதி – அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை

2 ஆம் பகுதி – ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமுரிய விரிவான அறிக்கை

**1 ஆம் பகுதி**

**ஊடக, தகவல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை.**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 210 | தகவல் திணைக்களம் |
| 211 | அரசாங்க அச்சாளர் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்கும் அமைச்சின் கீழுள்ள 2 திணைக்களங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 3,614,025,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 3,018,126,727 பயன்படுத்தப்பட்டிருந்தது அதற்கமைய, அமைச்சினதும் திணைக்களங்களதும் தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்புக்கள் ரூபா 1,952,641 இற்கும் ரூபா 309,647,107 இற்கும் இடைப்பட்ட வீச்சில் அல்லது மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் 1.02 சதவீதத்திற்கும் 18.91 சதவீதத்திற்கும் இடையேயான வீச்சில் அமைந்திருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினத் தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 122 | 1,637,000,000 | 1,327,352,893 | 309,647,107 | 18.92 |
| 210 | 191,050,000 | 189,097,359 | 1,952,641 | 1.02 |
| 211 | 1,785,975,000 | 1,501,676,475 | 284,298,525 | 15.9 |
| மொத்தம் | **3,614,025,000** | **3,018,126,727** | **595,898,273** | **16.49** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க அச்சாளர் திணைக்களத்தால் 2013 ஆம் ஆண்டிற்காக 20-03-02-05 ஆம் வருமானக் குறியீட்டிற்காக ரூபா 300 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 469.54 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 156 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 20-03-02-05 | 300,000,000 | 469,540,080 | 169,540,080 | 56.5 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12201 | 6,000,000 | 3,587,086 | 3,300,000 | 3,516,767 | 22,000,000 | 12,681,737 |
| 21001 | 8,000,000 | 7,367,705 | 5,000,000 | 6,263,249 | 46,000,000 | 28,012,685 |
| 21101 | 55,000,000 | 39,534,900 | 38,000,000 | 50,724,669 | 300,000,000 | 225,625,534 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்கள் என்பவற்றின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,890,415 ஆக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதி கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| ஊடக, தகவல் அமைச்சு | 7002/0000/00/0143/0013/000 | 1,816,275 |
| தகவல் திணைக்களம் | 7002/0000/00/0246/0013/000 | 4,340,660 |
| அரசாங்க அச்சாளர் திணைக்களம் | 7002/0000/00/0104/0013/000 | 3,733,480 |
| மொத்தம் | | 9,890,415 |

### 2.4.2 பொது வைப்புக் கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 2 திணைக்களங்களது பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 140,956,686 ஆக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| ஊடக, தகவல் அமைச்சு | 6000/0000/00/0015/0035 | 74,187,167 |
| தகவல் திணைக்களம் | 6000/0000/00/0015/0092 | 14,959,346 |
| அரசாங்க அச்சாளர் | 6000/0000/00/0015/0092 | 51,751,173 |
| திணைக்களம் | 6000/0000/00/0002/0004 | 59,000 |
| | | 140,956,686 |

## 2 ஆம் பகுதி

--------------------------

**ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விரிவான அறிக்கை**

----------------------------------------------------------------------------------------------------------

**1. தலைப்பு 122 – ஊடக, தகவல் அமைச்சு**

-----------------------------------------------------------------------

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

-----------------------------------------------------

ஊடக, தகவல் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 27 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

-------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக்கூற்று மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும்

இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்பு

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் ஊடக, தகவல் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு கண்டுபிடிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | சேதங்கள் மற்றும் நட்டப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | ஊழியர் சம்பளப் பதிவேடு | 2010 பெப்ரவரி 19 ஆந் திகதிய டிஎம்ஏ/2010(4) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 453(2) |
| (iv) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கல்களை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அக் கொடுக்கல் வாங்கல்கல்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(i) கண்டி கல்வி கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் ஊடக முறைப்படுத்தல் செயலமர்விற்காக ரூபா 196,500 செலவிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான மதிப்பீடொன்றும் திட்டமொன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 சனவரி 10 ஆந் திகதி மற்றும் 2013 திசெம்பர் 27 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட பரஸ்பர ஊடக சந்திப்பிற்காக ரூபா 7,168,650 தொகை உணவு பாணங்களுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன், விருந்தினர்கள் மற்றும் பங்குபற்றியவர்கள் தொடர்பான உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பதில் அளிக்கப்படாதிருந்ததுடன், அக்கணக்காய்வு ஐயவினாக்களுக்குரியதாக கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 203,945,045 ஆக இருந்தது.

**(ஈ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 200,000 கூட்டுத்தொகையான மூலதன நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 21 செலவின விடயங்களுக்கு ரூபா 361,420,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 74,104,080 தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 287,315,920 ஆன நிதி ஏற்பாடு சேமிப்பிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடுகளில் 25 சதவீத்திற்கும் 99 சதவீதத்தற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. உரிய நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக முறையாக பணத்தைப் பயன்படுத்தாமை அல்லது மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக இச்சேமிப்புக்கள் இடம்பெற்றிருந்தது.

(iii) 04 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,400,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு முழுவதும் மேலும் 04 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 19,000,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாட்டில் 76 சதவீதம் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் தேவையான அளவை விட கூடுதலாக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2013 ஆம் ஆண்டில் இரண்டு செயற்திட்டங்களுக்காக நிதிப் பிரமாணம் 94(1) இற்கு இணங்காமல் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை மிகைத்து ரூபா 277,997,186 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**(உ) கட்டுநிதிக் கணக்கு**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் செயற்பாடுகள் நிறைவுபெற்று 19 நாட்கள் மற்றும் 8 நாட்கள் தாமதத்தின் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்க முடியுமான ஆகக்கூடிய செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 ஆக

இருந்த போதிலும், அந்த பிரமாணங்களுக்கு முரணாக 40 சந்தர்ப்பங்களின் போது 20 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இற்கு மேற்பட்ட ரூபா 500,000 வரையான வீச்சில் ரூபா 3,922,975 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

**(ஊ) பொது வைப்புக் கணக்கு**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக அறவிடப்பட்ட மொத்த வரி வருமானம் ரூபா 88,270,500 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 67,039,456 தொகை அதாவது 76 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 215(3) இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ரூபா 1,426,529 தொகை செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு வைப்புக் கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிம் அந்நிதிஏற்பாடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

---------------------------------------------------------------------------------------------------------------------

1220Ì ஆம் விடய இலக்கமுடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 310,274 ஆக இருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 1.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

---

2013 ஆம் ஆண்டிற்காக அமைச்சினால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் அமைச்சின் அனைத்து செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

எடுத்துக்காட்டாக : இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் என்பவற்றிற்கு வரி அறவிடல்

### 1.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்

---

2013 ஆம் ஆண்டிற்காக அமைச்சு மட்டத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அக் கூட்டங்களுக்காக அமைச்சின் கீழ் காணப்படும் 12 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் 02 தடவைகளிலும் 09 நிறுவனங்கள் தலா ஒரு தடவை வீதமும் கூட்டங்களுக்காக பங்குபற்றியிருந்தனர். 2 நிறுவனங்களுக்கு கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த பொருள் மிகைகள், பற்றாக்குறை மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

---

அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூபா 6,750,000 பெறுமதியான மோட்டார் வண்டி 2012 பெப்ரவரி 03 ஆந் திகதி ரூபவாஹினி பயிற்சி

நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ரூபவாஹினி பயிற்சி நிறுவகம் 2013 ஆம் ஆண்டிலிருந்து அரச கம்பனியொன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 நவம்பர் 24 ஆந் திகதி வரையிலும் அவ்வாகனத்தின் உரித்து அந்நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பெறவேண்டிய மீதிகள்**

2006 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு இணங்க 02 தொலைக்காட்சி அலைவரிசைகள் தொடர்பாக இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் வர்த்தக ரீதியான நிகழ்ச்சிகளுக்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடவேண்டிய வரி வருமானம் ரூபா 21,740,500 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டன. இந்த நிலுவை வரி வருமானத்திற்காக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டணம் ரூபா 9,260,309 ஆக இருந்தது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு குறைவாக காணப்படுகின்ற அமைச்சின் தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 281,998,775 தொகை ஆகும்.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) | ரன்மிஹிதன்ன தொலைக்காட்சி சினிமா பூங்காவின் கட்டிடமொன்றில் 2011 ஒக்தோபர் 30 ஆந் திகதி இடம்பெற்ற தீயினால் ஏற்பட்ட நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1645(இ) | குழாம் வாகனங்களில் பிரயாணம் செய்த உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு பிரயாண முடிவிலும் நாளாந்த ஓட்ட அட்டவணையில் உரிய அனைத்து தகவல்களையும் பதிவு செய்திருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | 2013 ஆம் ஆண்டிற்காக அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களில் 04 வாகனங்களுக்கு முழு ஆண்டிற்கும் 13 வாகனங்களுக்கு 5 மாதங்கள் முதல் 9 மாதங்கள் வரையிலான வீச்சிலும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய மாதாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647 (ஆ) | வாகனங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் 3:1 ஆம் பந்தி | அமைச்சரின் பயன்பாட்டிற்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் ஒதுக்கக்கூடிய ஆகக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும் 10 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

## 1.7 செயலாற்றல்

2013 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக ரீதியான நிகழ்ச்சிகளுக்காக வரி அறவிடும் போது 2006 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் விருதுகள் பெற்ற படைப்புக்களைக் கொண்டு வருவதற்கு உதவியாக தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள், சிறுவர்களுக்கு பொருத்தமான விநோதங்களை வழங்கும் சிறுவர் திரைப்படங்களும் காட்டுன்களும் வரி வருமானத்திலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தன. எனினும் இவ்வரி விடுதலை வழங்கும் போது இறக்குமதியை அதைரியப்படுத்தி உள்நாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படக் கைத்தொழிலில் இலங்கையர்களின் பாரம்பரியங்களை விருத்தி செய்யும் நோக்கத்திலும் சிறுவர் நிகழ்ச்சித்திட்டங்களின் போது சிறுவர்களின் மனதைக் கவரக்கூடிய மற்றும் பௌதீக வளர்ச்சியை விருத்தி செய்யும் வகையில் நிகழ்ச்சிகளை காண்பித்தல் இச்சட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன. மேலும் சிறுவர் மனதிற்கு பொருத்தமற்ற (அராஜகக் காட்சிகள் கொண்ட) நிகழ்ச்சிகள் (காட்டுன்) வரி அறவிடப்பட்டு ஒளிபரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தன. பொருத்தமற்ற தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் என்பவற்றிற்கு வரி அறவிடப்பட்டு ஒளிபரப்புவதற்கு இடமளித்தல் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக இருந்தன.

அமைச்சினால் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை விட வருமானம் உழைப்பது தொடர்பில் முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) கீழே காட்டப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் ஒளிபரப்புவதை அநேகமான நாடுகளில் தடை செய்யப்பட்டிருந்த காட்டூன் காட்சிகள் தொடர்பான பரிசோதனையொன்று இல்லாமல் சிறுவர் காட்டூன்களாக பெயரிடப்பட்டு வரிகளிலிருந்து விடுவிக்கப்பட்டு ஒளிபரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

| **நிகழ்ச்சிகள்** | **தடைசெய்யப்பட்ட நாடு** | **தடைசெய்யப்பட்டமைக்கான காரணம்** |
|---|---|---|
| Sponge bob | சீனா | Particularly aggressive censor objected to the content at his show |

(ii) அலைவரிசையொன்றிற்காக சிறுவர் மனதிற்கு பொருத்தமற்ற தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் என்பவற்றை எந்தவேளையிலும் ஒளிபரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

| திரைப்படங்கள்/ நாடகங்களின் பெயர் | வரி விடுவிப்பிற்கான காரணம் | வரி விடுவிப்பதற்குரிய குழு வினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரை |
|---|---|---|
| Game of thrones | விருதுகள் பெற்ற திரைப்படமாக இருந்தமை | எந்தவொரு நேரத்திலும் ஒளிபரப்புவதற்கு *பின்வரும் காட்சிகள் தவிர்க்கப்பட்டு (Nude scences, sex scences, Violence scences) அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |

## (ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரண்மிஹிதென்ன சினிமா கிராமத்தில் படப்பிடிப்பில் பங்குபற்றுவர்களுக்கு அறை வசதிகளை வழங்குவதற்காக ஏ, பீ மற்றும் சீ தரத்திலான மூன்று அறை வகைகளின் கீழ் 43 அறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவற்றின் பயன்பாடு முறையே 20 சதவீதம், 22 சதவீதம், மற்றும் 61 சதவீதமாக இருந்தன. இப்பயன்பாடு கூடுதலான அளவு இலவசமாக வழங்கும் இந்திய திரைப்படமொன்றை தயாரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தன. மேலும் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்கள் என்பவற்றுக்காக கலையரங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அதன் மூலம் எந்த வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் இடங்களை மீளமைத்தல், ரண்மிஹிதென்ன மண்டபமொன்றை கொழும்பில் திறந்து வைத்தல், சினிமா பாடசாலையொன்றை ஆரம்பித்தல் மற்றும் ரண்மிஹிதென்ன தொலைக்காட்சி சினிமா கிராமத்தை மீண்டும் ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 140,000,000 ஆன நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 903,052 தொகை செலவு செய்து ரண்மிஹிதென்ன சமையலறை புனரமைத்தல் தவிர ஏனைய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) திட்டமிடல்**

------------------

**(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

---

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 400 ஊடகவியலாளர்களை பயிற்றுவிப்பதற்காக 08 செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 4,000,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2013 ஆண்டின் போது 100 ஊடகவியலாளர்களுக்காக ஒரு செயலமர்வு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

- காலரீதியான சிக்கல்கள் தொடர்பாக அறிக்கைகளை வெளியிடுவதற்காக ரூபா 3,000,000 தொகையும் ரசிகர்களை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு மற்றும் உள்ளடக்கப்பட்ட பகுப்பாய்வு மற்றும் சர்வதேச மீளாய்வு பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக ரூபா 3,000,000 தொகையுமாக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்குறித்த பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்கான செலவினம் உட்பட ஆண்டின் போது ரூபா 9,127,933 தொகை செலவிடப்பட்டிருந்தது. காலாண்டு செயன்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் இச்செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு எவ்வளவு தூரம் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதையும் செயற்படுத்தப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள் எத்தகையதென்பதையும் தீர்மானிக்க முடியாமல் இருந்தன.

- 2013 இன் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் எண்ணியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், ஒளிபரப்பு அபிவிருத்தி அதிகாரசபையை ஸ்தாபித்தல், வெகுசன ஊடக விருது வழங்கும் விழாவை நடாத்துதல் மற்றும் தேசிய அபிவிருத்தியை நோக்கி ஊடக விளம்பரங்களை

வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 15,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இச்செயற்பாடுகள் செயற்படுத்தப்படாதிருந்ததுடன், அந்நிதிஏற்பாட்டில் ரூபா 4,000,000 தொகை பொது நலவாய அரச தலைவர்களின் மாநாட்டின் நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 7,630,000 தொகை தேசத்திற்கு மகுடம் செயற்திட்டத்திற்காகவும் ரூபா 2,368,000 தொகை ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ii) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பணிகள்**

---

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாததும் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், அமைச்சரின் ஆலோசணையின் பிரகாரம் அமைச்சரின் ஊடகச் செயலாளரால் கண்டி கல்வி கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் புதிய ஊடக கலாசாரத்தை ஊக்குவிப்பதற்காக அறிவூட்டும் ஒரு நாள் கருத்தரங்கொன்று ரூபா 196,500 செலவு செய்து நடாத்தப்பட்டிருந்தது.

**(iii) தவறான விடயங்களை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குதல்**

---

செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பின்வரும் விடயங்கள் சரியானாதாக இல்லாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டன.

- தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்பினை மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு திறமையாளர் குழுவொன்றை ஸ்தாபித்தல் மற்றும் பயிற்சியளித்தலின் கீழ் 152 பேர் பயிற்சியளிக்கப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- ஊடகவியலாளர்களின் தொழில்சார் திறன்களை மேம்படுத்துதை நோக்காகக் கொண்டு பதிவுசெய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் தரவுக் களஞ்சியமொன்றை உருவாக்கியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 யூலை 20 ஆந் திகதி ரண்மிஹிதென்ன தொலைக்காட்சி சினிமா பூங்காவிற்கு வெளிக்கள சுற்றுலாவொன்றில் ஈடுபட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச அரசியல்வாதிகள் உட்பட 40 பேருக்கு மதிய போசனத்தினை வழங்குவதற்கு ரூபா 54,000 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாதிரியொன்றாக தெரிவுசெய்யப்பட்ட 02 அலைவரிசைகளால் முறையே ரூபா 13,000,000 தொகை மற்றும் ரூபா 9,300,000 தொகை இறக்குமதி வர்த்தக விளம்பரங்களுக்காக வரியாக அமைச்சிற்கு செலுத்தப்பட்டிருந்தமை அமைச்சின் பதிவேடுகளை பரீட்சித்த போது கண்டறியப்பட்டது. குறித்த இரண்டு அலைவரிசைகளின் பதிவேடுகளை பரீட்சித்த போது எந்தவொரு கொடுப்பனவும் வர்த்தக விளம்பரங்களுக்காக மேற்காள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பணம் செலுத்தாதவர்களின் பெயரில் பொது 172 மாதிரியின் கீழ் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தமை அமைச்சின் நிதிக்கட்டுப்பட்டின் பலவீனமாக அவதானிக்கப்பட்டது.

## 1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையிலிருந்து விலகுதல்**

---

பின்வரும் சந்தர்ப்பங்களில் வழங்குனர்களைத் தெரிவுசெய்யும் போது கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) 2013 திசெம்பர் 27 ஆந் திகதி ஹொட்டெலொன்றில் நடைபெற்ற பரஸ்பர ஊடக சந்திப்பிற்காக உணவு பானங்களை வைப்பதற்கு முன்பக்க பூங்காவை அமைத்தல் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை வழங்குவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு கையளித்து ரூபா 1,625,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) ரண்மிஹிதென்ன தொலைக்காட்சி சினிமா பூங்காவின் இணையத்தளம் உட்பட புதிய தோற்றங்களை வெளியிடல் விழாவிற்கான நிகழ்ச்சிகளின் முகாமைத்துவம், உணவு பானங்களை வழங்குதல் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக முறையே ரூபா 6,464,042 தொகை, ரூபா 2,345,600 தொகை மற்றும் ரூபா 319,264 தொகைகளை 5 தனியார் நிறுவனங்களுக்கு கையளித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

2009 ஒக்தோபர் 26 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2009 நவம்பர் 12 ஆந் திகதி அமப/09/2305/338/048 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் சேகரிக்கப்படும் வரி வருமானத்திலிருந்து ரன்மிஹிதென்ன தொலைக்காட்சி சினிமா கிராமத்தின் நிர்மாணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக செலவு செய்வதற்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த சாதாரண நிர்வாக நடவடிக்கைகளான எரிபொருள், மேலதிக நேரம் போன்ற செலவினங்களுக்காக அங்கீகாரமொன்றில்லாமல் அவ்வரி வருமானத்திலிருந்து ரூபா 9,321,367

தொகை அதாவது சேகரிக்கப்பட்ட வரி வருமானத்திலிருந்து 12 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்தது.

## 1.10 நட்டங்களும் சேதங்களும்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ரன்மிஹிதென்ன தொலைக்காட்சி சினிமா கிராமத்தில் நுழைவுச்சீட்டு விற்பனை, திரைப்படமெடுத்தல், அறை வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 9,339,337 ஆக இருந்தது. அதன் பராமரிப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக ரூபா 60,942,065 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் நிதிசார் நட்டம் ரூபா 51,602,688 ஆக இருந்தது.

(ஆ) வரி செலுத்தப்படாமல் இறக்குமதி வர்த்தக விளம்பரம் ஒலிபரப்பு செய்யப்படுகின்றதா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டுமென கணக்காய்வின் போது பலமுறை சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக 2013 ஆம் ஆண்டில் வரி அறவிடப்பட்ட இறக்குமதி வர்த்தக விளம்பரங்கள் மற்றும் உண்மையாக விளம்பரம் செய்யப்பட்ட இறக்குமதி வர்த்தக விளம்பரம் தொடர்பாக 2 நிறுவனங்கள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு பரீட்சிக்கப்பட்டதுடன் இறக்குமதி வர்த்தக விளம்பர வரி செலுத்தாமல் விளம்பரம் பிரச்சாரம் செய்யப்பட்டிருந்தமை அந்த 2 தெரிவு நிறுவனங்கள் மாத்திரம் ரூபா 2,500,000 ஆன வருமானமொன்று அரசினால் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இறக்குமதி வர்த்தக விளம்பரத்திற்காக அங்கீகாரம் வழங்கும் போது அவை உள்நாட்டு பழக்க வழக்கங்களுக்கு ஏற்ற வகையில் இருப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 1.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது கௌரவ அமைச்சரின் மின்சாரப் பட்டியலுக்காக ரூபா 2,142,821 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்ததுடன் மாதாந்த மின்சாரப் பட்டியல் ரூபா 131,313 முதல் ரூபா 206,575 வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 1.12 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

(அ) அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகளின் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு** | | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|---|
| | **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| (i) | 2012 | 8(ஆ)(ii) | மஹிந்த ராஜபக்ஷ தொலைக்காட்சி சினிமா பூங்காவிற்காக தனியான அதிகாரச் சட்டமொன்றை நிறைவேற்றுவதற்கு 2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 நவம்பர் 20 ஆந் திகதி வரையிலும் அதிகாரச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2012 | 12(அ) | ரண்மிஹிதென்னவிற்கு வழங்கப்பட்ட நுழைவுச்சீட்டு மற்றும் பெற்ற வருமானங்களுக்குகிடையே ரூபா 99,305 தொகையான பற்றாக்குறை தொடர்பாக 2014 நவம்பர் 20 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2012 | 12(ஐ) | 2012 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட வெகுசன ஊடக சம்பிரதாயக் கோவை 2014 நவம்பர் 20 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

(iv) 2012 வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் போது நிரந்தர அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப் பட்டிருந்ததுடன் நிரந்தர அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பதற்கோ அல்லது புதுப்பிப்பதற்கோ முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் எவ்வித மேற்பார்வைகளுமின்றி அலைவரிசைகளில் ஒலிபரப்புச் செயற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டன. பின்னர் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திரங்களில் முன்னர் குறிப்பிடப்படாத நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்டி ருந்தமையினால் நிறுவனம் தொடர்பாக ஒருமித்த தீர்மானங்களை எடுப்பதற்கு முடியாதிருந்தமை மற்றும் தீர்மானம் எடுத்தலில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சிற்குரிய பொதுக் கணக்குகள் குழுவினால் 2014 சனவரி 22 ஆந் திகதி வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைய 2014 நவம்பர் 21 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் கீழே காட்டப்படுகின்றன.

| **பொதுக் கணக்குகள் குழுவின் அறிக்கையின் பந்திகளுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| (i) | 05 | இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்காக முறைப்பாட்டினை மேற்கொள்ளக்கூடிய வகையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்தல். |

| | | |
|---|---|---|
| (ii) | 06 | வெகுசனஊடக அமைச்சின் அடிப்படை நோக்கமான பொதுமக்களுக்கான பாதுகாப்பு, பொருளாதாம் தொடர்பான உண்மையான தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ளும் உரித்தை உறுதிப்படுத்துவதற்குரிய வரைவு அதிகாரச்சட்டத்தினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பான உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று குழுவிற்குச் சமர்ப்பித்தல்.<br><br>என்ற கட்டளை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்படாதிருந்தமை பொது மக்களுக்கான பாதுகாப்பு, பொருளாதாம் தொடர்பான உண்மையான தகவல்களை இலகுவாக பெற்றுக் கொள்ளும் உரித்தை உறுதிப்படுத்துவதற்குரிய வரைவு அதிகாரச்சட்டமொன்றை சமர்ப்பித்தல் அரசின் கொள்கை ரீதியான தீர்மானமொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாக பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | 07,08 | ஒலிபரப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தை நிறைவேற்றுதல் மற்றும் தாபித்தல், எண்ணியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் செயன்முன்னேற்றம் தொடர்பாக குழுவிற்கு அறிக்கையொன்று சமர்ப்பித்தல் |
| (iv) | 12 | அரசாங்க நிதியை முறைகேடாக தனியார் தரப்பினருக்கு அனுப்புவதை தவிர்ப்பதற்காக தனியார் வானொலி அலைவரிசை மற்றும் தொலைக்காட்சி அலைவரிசை அனுமதிப்பத்திரதாரர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், வருடாந்த கட்டணமொன்றை அறவிடுதல் மற்றும் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல் என்பவற்றிற்கு உரிய முறைமையொன்றை ஏற்படுத்துதல். |
| (v) | 13 | அனுமதிப்பத்திரதாரரின் சரியான தகவல்களை உரிய நிறுவனங்களிடமிருந்து (கம்பனிப் பதிவாளர்) பெற்றுக் கொண்டு குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் கேபிள், செய்மதி மற்றும் இணையத்தளத்தினை |

அடிப்படையாக கொண்ட தொலைக்காட்சி நிறுவனம் தொடர்பான புதிய கொள்கையொன்றை ஏற்படுத்துதல்.

| | | |
|---|---|---|
| (vi) | 15 | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல். |
| (vii) | 20 | (i) 2010 இல் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினங்களுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பித்தல்<br>(ii) இறக்குமதி செய்யப்படுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான இறக்குமதி வரி வருமானத்திற்காக நிதியமொன்றை தாமதமின்றி ஏற்படுத்துதல். |
| (viii) | 26 | தேசிய ஊடக கொள்கையொன்றை உருவாக்குதல் மற்றும் தொலைக்காட்சி பிரச்சார விளம்பரங்களை கட்டுப்படுத்தல் தேவைப்பாடு கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் |

## 1.13 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது வரி வருமானங்களை சுயமாக பதிவு செய்யக்கூடிய 02 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வியந்திரங்களைக் கொள்வனவு செய்தமை வரி வருமானத்தை சேகரிப்பதற்குரிய தகவல்களைக் கண்காணித்தல் பிரதான நோக்கமாக இருந்தது. எனினும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களின் ஒளிபரப்பை பரிசோதித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. விண்ணப்பிக்காதிருந்த போதிலும் வரி அறவிடவேண்டிய வர்த்தக விளம்பரங்கள் ஒளிப்பரப்பப்படுகின்றனவா எனப் பரிசோதனை செய்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2013 ஆம் ஆண்டின் போது ஒளிபரப்புவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட சிறுவர் திரைப்படங்கள்/ காட்டூன்களுக்கு மேலதிகமாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் காட்டூன்கள் ஒளிபரப்பப்பட்டிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2006 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கையர்களின் பாரம்பரியங்களை விருத்தி செய்யும் நோக்கத்தில் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை இந்நாட்டில் ஒளிபரப்புவதற்காக வரி விதிக்கப்பட்டிருந்தது. எனினும் 15 அனுமதிப்பத்திரங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கேபிள், செய்மதி, இணையத்தளம் மற்றும் தொலைபேசி அடிப்படையிலான தொலைக்காட்சி அலைவரிசைகளினால் ஒளிபரப்பரப்படுகின்ற நிகழ்ச்சிகள் இந்த வரிக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் குறித்த வரி விதிப்பின் நோக்கம் இந்நாட்டில் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் சேகரிக்கப்படுகின்ற வரி வருமானங்களை செலவு வைப்பதற்காக நிதியமொன்றை உருவாக்குவதற்கு 2009 ஆம் ஆண்டில் அரசாங்க நிதித் திணைக்களத்துடன் இணங்கியிருந்த போதிலும் அது 2013 யூலை வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2 அரச கூட்டுத்தாபனங்களிலிருந்து ஊடக தகவல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த 12 ஊழியர்களுக்குச் சம்பளமாக ரூபா 4,982,066 தொகையும் மேலதிகநேரப் படிகளாக ரூபா 2,387,613 தொகையும் அக்கூட்டுத்தாபனங்களினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் அவர்கள் இணைக்கப்பட்டிருந்த பிரிவு தொடர்பான தகவல்கள், வருகை உறுதிப்படுத்தல், மேலதிக நேர வேலையில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தல் போன்ற எதனையும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தானம் அல்லது அரச அச்சீட்டுக் கூட்டுத்தாபனத்திடமிருந்து உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்ததாக கடிதமொன்றோ அல்லது அந்த உத்தியோகத்தர்கள் அமைச்சின் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்ததாக அறிவித்தலொன்றோ அமைச்சு அலுவலகத்தின் கடித கோவைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான உத்தியோகத்தர்கள் அமைச்சின் அலுவலகத்தில் எந்தவொரு பிரிவிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.14 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைப் பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 13 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 102 | 74 | 28 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 33 | 31 | 02 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 153 | 121 | 34 | 02 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 34 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 1.14 (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், ஏனைய நிறுவனங்களிடமிருந்து 14 பதவியணியினர் அமைச்சின் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### (ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் வகை | பதவிகள் | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| ------------------------- | --------------------- | ----------- | ------------------------ | --------------------- |
| ஆரம்ப | சாரதி | 02 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தானம் | 2010.08.02 முதல் 2013.12.31 வரை |
| - மேற்படி - | சாரதி | 01 | - மேற்படி - | 2011.10.03 முதல் 2013.12.31 வரை |
| - மேற்படி - | அ.ப.உ | 02 | - மேற்படி - | 2010.08.02 முதல் 2013.12.31 வரை |
| - மேற்படி - | தயாரிப்பு உதவியாளர் (ஒப்பந்தம்) | 01 | அரசாங்க அச்சீட்டுக் கூட்டுத்தாபனம் | 2010.12.01 முதல் 2013.12.31 வரை |
| - மேற்படி - | தொழிலாளர் - ஒப்பந்தம் | 02 | அரசாங்க அச்சீட்டுக் கூட்டுத்தாபனம் | 2011.07.11 முதல் 2013.12.31 வரை |
| - மேற்படி - | அச்சீட்டு பணி உதவியாளர் | 01 | - மேற்படி - | 2013.06.03 முதல் 2013.12.31 வரை |
| இரண்டாம் தர | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) | 01 | - மேற்படி - | 2011.06.22 முதல் 2013.12.31 வரை |
| | | 01 | | 2011.12.16 முதல் 2013.12.31 வரை |
| | | 01 | | 2012.11.01 முதல் 2013.12.31 வரை |

## 2. தலைப்பு 210 – தகவல் திணைக்களம்

--------------------------------------------------------------------

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------------------

தகவல் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 15 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஊ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.3 இலிருந்து 2.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு கண்டுபிடிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
| --- | --- | --- |
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | ஊழியர் சம்பளப் பதிவேடு | 2010 பெப்ரவரி 19 ஆந் திகதி டீஎம்ஏ/2010(4) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 453(2) |
| (iii) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

**(ஆ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 சனவரி 20 ஆம் திகதி வரையிலும் பதில் அளிக்கப்படாதிருந்ததுடன், அக்கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 14,419,557 ஆக இருந்தது.

**(இ) பாதீட்டு முரண்**

நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக இரண்டு செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 27,220,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் ரூபா 701,262 ஆல் விஞ்சி பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஏப்ரல் 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஒரு பதவிநிலை

உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்க முடியுமான ஆகக்கூடிய செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 60,000 வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அங்கீகாரத்திற்கு முரணாக 2 சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 60,000 இற்கு மேற்பட்ட ரூபா 464,285 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தது.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக செலவினங்களை மேற்கொள்வதற்கு ஏனைய திணைக்களங்களிடமிருந்து கிடைத்த ரூபா 3,141,819 தொகையான நிதி ஏற்பாடு வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதில் 3 நிறுவனங்களிடமிருந்து கிடைத்த ரூபா 911,994 தொகையான ஏற்பாடுகள் 01 ஆண்டு முதல் 02 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக இருந்து வந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது புதிய ஊடக மத்திய நிலையத்திற்கும் அதனுடன் தொடர்புடைய ஏனைய செயற்பாடுகளுக்காகவும் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 45 மில்லியன் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இத்தொகையில் 2012 ஆம் ஆண்டில் குறித்த பொறுப்புக்கள் தீர்வுசெய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த பழைய கேட்போர்கூட திருத்த நடவடிக்கைகளுக்காக அத்தொகையில் ரூபா 2,231,012 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---------------------------------------------------------------------------------------------------------

மரணித்த மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்கள் தொடர்பில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 261,272 தொகையான கடன் மீதிகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்**

2013 ஆம் ஆண்டிற்காக அமைச்சு மட்டத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் கீழ் அரச வெளியீட்டுப் பணியகத்தின் விற்பனைப் பட்டியல் தயாரித்தல், நுகர்வோருக்கு இருப்புக்களை இனங்காண்பதற்கு வசதிகளை செய்துகொடுத்தல், இருப்பு பதிவேடுகளுக்கு உட்படுத்தல் தொடர்பான கணனி மென்பொருளொன்று ரூபா 600,000 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த இக்கணனி மென்பொருட்களிலிருந்து விற்பனைப் பட்டியல்கள் தயாரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 யூலை மாதம் வரையிலும் நுகர்வோருக்கு இருப்புக்களை இனங்காண்பதற்கு வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் இருப்பு பதிவேடுகளுக்கு உட்படுத்தல் என்பன இக்கணனி மென்பொருளை பயன்படுத்தி மேற்கொள்வதற்கு தவறியிருந்தது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும்

பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம், அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தில் காணப்படுகின்ற புத்தகங்கள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவ்வறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது என அப்பிரிவின் தலைவரால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) தெசதிய சஞ்சிகையின் இறுதி இருப்புக்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) கிடைக்க வேண்டிய மீதி**

07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வெவ்வேறு முகவர் நிறுவனங்களிடமிருந்து ரூபா 24,340 தொகையான நிலுவை வருமானம் காணப்பட்டது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ஒரு வருடத்திற்கும் குறைவான காலமாக தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 3,561,652 ஆக இருந்தது.

## 2.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2) | பதவிநிலைத் தரமற்ற 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,000 முதல் ரூபா 60,000 வரையான வீச்சில் 45 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,205,000 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப் பிரமாணம் 371(2) (ஆ) | 04 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 784,285 கூட்டுத்தொகையான செயல் நிமித்த கட்டுநிதிகள் உரிய செயற்பாடு நிறைவு பெற்று 14 நாட்கள் முதல் 89 நாட்கள் வரையான காலவீச்சிலான காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாணம் 454 | சில இருப்புப் புத்தகங்கள் சமப்படுத்தப்பட்டு மீதி முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. தெசதிய சஞ்சிகை இருப்பு புத்தகங்களில் முறையாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணம் 802(8) | வாகனம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, விலை, பழுதுபார்த்தல்கள், செயற்பாடற்றுக் காணப்பட்ட காலம் போன்ற தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (v) நிதிப் பிரமாணம் 1645(அ) | வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவை பூரணப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (vi) நிதிப்பிரமாணம் 1645(இ) | ஒவ்வொரு பிரயாணம் முடிவடைந்தவுடன் நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் சகல குறிப்புக்களும் உரியவாறு உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், |

அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) நிதிப்பிரமாணம் 1647(ஆ) வாகனங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

---------------------------------------------------------------------------------------------

**செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடல்**

----------------------------------------------------------------------------

திணைக்களத்தின் சொந்தமான ஒலிப்பதிவுக்கூடம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென 2006 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்ததுடன், அதற்காக 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 2,550,000 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாடு 2006 ஆம் ஆண்டின் போது கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், 2011 யூலை மாதத்தின் போது அதில் ரூபா 311,998 தொகை எல்லை சுவரொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய தொகையை மீண்டும் திணைக்களத்திற்கு பெற்றுக்கொண்டு 2011 ஆம் ஆண்டின் போது அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த ஒலிப்பதிவுகூடத்தின் திருத்தம் கட்டாயமாக திருத்தம் செய்ய வேண்டுமென இனங்காணப்பட்டிருந்த போதிலும், 07 ஆண்டுகள் கடந்திருந் போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நவீன தொழில்நுட்ப முறைமை மற்றும் உபகரணங்களுக்காக இத்திருத்தங்கள் தாக்கம் செலுத்தாதென பணிப்பாளர் நாயகம் பதிலாக குறிப்பிட்டிருந்த போதிலும், டிஜிடல் தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும், மேற்குறித்த திருத்தங்கள் அவசியமாதென உரிய பிரிவுத் தலைவர்களால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2.8 செயலாற்றல்

------------------------

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயன்முறைகள் உட்பட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காலரீதியான செயற்பாடுகள் தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுதல் திணைக்களத்தின் பிரதான பணியாக காணப்படுகின்றது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பொது மக்களுக்குத் தேவையான அரசின் வெளியீடுகளை பெற்றுக்கொள்வதற்கு அரச வெளியீட்டு நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த அலுவலகத்தினால் விற்பனை செய்யப்படுகின்ற அரசின் வெளியீடுகள் அச்சாளர் திணைகளத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால் அச்சாளர் திணைக்களத்தினால் தேவையான சில வெளியீடுகள் வழங்கப்படாமையால் திணைக்களத்தினால் பொது மக்களுக்காக நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தடையாக உள்ளது.

(ii) விசேட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்கள், (இலங்கையின் முதலாவது சுதந்திரதின விழா போன்ற) அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய செயற்திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட குறுந் திரைப்படங்கள் மற்றும் விவரண நிகழ்ச்சிகள் என்பவற்றைப் பாதுகாத்தல், திணைக்களத்தின் நோக்கங்களில் முன்னுரிமையாக இருந்தன. எனினும் திணைக்களத்தின் திரைப்பட பாதுகாப்பகம் வருடக் கணக்காக நவீனமயப்படுத்த வேண்டுமென அப்பிரிவின் உத்தியோகத்தர்களால் வேண்டுகோள் விடப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்பகம் உரிய நியமத்தில் இல்லாமையால் அதில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் சுகாதாரத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்ததாகவும் ஆய்வுகூடத்திற்குப் பொருத்தமான காற்றுச்சீராக்கி இயந்திரங்கள் பொருத்தப்படாதிருந்தமையால் இரசாயன பொருட்களின் தாக்கத்தினால் காற்றுச்சீராக்கி இயந்திரங்கள் அடிக்கடி

செயலற்றுப் போவதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

**(ஆ) திட்டமிடல்**

------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

2013 ஆம் ஆண்டின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- ஊடகவியலாளர்களுக்காக தரவு முறைமையொன்றைத் தயாரித்தல்
- திரைப்பட பாதுகாப்பகத்தை நவீனமயப்படுத்தல்
- டேட்டா காட் இயந்திரத்தினைக் கொள்வனவு செய்தல்
- மனித வள முகாமைத்துவம் தொடர்பான தரவு முறையொன்றைத் தயாரித்தல்

**(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத செயற்பாடுகள்**

வெளியீட்டு பதிவேட்டு ஆவணங்களை கணனிமயப்படுத்தல் முன்னைய ஆண்டின் போது நிறைவேற்ற வேண்டிய செயற்பாடொன்றாக 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக ரூபா 0.5 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது 2012 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு நிறைவேற்றப்படாத செயற்பாடு 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், 2014 நவம்பர் மாதம் வரையிலும் வெளியீட்டு பதிவேட்டு ஆவணங்கள் கணனி மயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(iii) செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிட்ட தகவல்களுடன் பிரிவுகளிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்கள் இணங்காமை**

செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த 12 செயற்பாடுகளில் 8 செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த 5 செயற்பாடுகளின் தகவல்கள் அந்தந்த பிரிவுகளில் பெற்றுக்கொண்ட தகவல்களுடன் ஒப்பிடும் போது இணங்கியிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயலாற்றல் அறிக்கையுடனான தொடர்பு | விபரங்கள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|
| | | செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் | பிரிவுகளிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் |
| 11.1.7 | பாடசாலை மாணவர்களுக்காக ஊடக செயலமர்வுகளை ஒழுங்குசெய்தல் | 08 | 01 |
| 12.2.2 | பாடசாலை ஊடக செயலமர்வுகளை நடாத்துதல் | 08 | இல்லை |
| 1.3.3.1 | தெசதிய சஞ்சிகை அச்சிடல் | 12 | 11 |
| 1.3.3.3 | திங்கள் சஞ்சிகை அச்சிடல் | 02 | 01 |
| 1.3.3.4 | ஊடகங்களின் பெயர்ப்பட்டியல் | 01 | இல்லை |

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கலொன்று தொடர்பான விபரம் பின்வருமாறு

கொழும்பு கோட்டை அரசாங்க வெளியீட்டுப் பிரிவின் களஞ்சியம் காணப்படுகின்ற கட்டிடத்தின் கீழ் மாடி வெளித்தரப்பினருக்கு 2001 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தின் மின்சாரப் பட்டியல் கட்டணமும் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆதனவரிக் கட்டணம் மற்றும் 2005 ஆம் ஆண்டிலிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய வாடகையையும் குத்தகையாளரால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2013 யூன் மாதம் வரை அக்கீழ் மாடியில் சிற்றுண்டிச்சாலையொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக மதுபான அனுமதிப்பத்திரமொன்றும் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் வரை நிலுவையான வாடகை, நிலுவை மின்சாரப் பட்டியல் மற்றும் நிலுவை வீதவரி என்பவற்றை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 யூன் மாதம் வரையிலும் சிற்றுண்டிச்சாலையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,653,515 தொகையான நிலுவை வாடகையைப் பெற்றுக் கொள்வதற்காக சட்ட ஆலோசணை கேட்கப்பட்டிருந்த போதிலும், 2014 நவம்பர் மாதம் வரையிலும் அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சிற்றுண்டிச்சாலைக்காக வழங்கப்பட்டிருந்த மதுபான அனுமதிப் பத்திரத்தின் பயன்பாடு தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கலொன்று தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

பிரதான மின் வயரை கொண்டு செல்வதற்குத் தேவையான கேபிளுக்காக உரிய ஒப்பந்தக்காரருக்கு மீற்றரொன்றுக்கு ரூபா 394 வீதம் 26,723 மீற்றர்களுக்காக ரூபா 10,528,862 செலுத்தப்பட்டிருந்தது.

(அ) அளவீட்டுப் பட்டியலின் பிரகாரம் விசேட கட்டளையொன்று மூலம் பெற்றுக்கொண்ட மதியுரைக் கம்பனியின் பரிந்துரை அடிப்படையில் அக்கேபிள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அக்கட்டளையோ அல்லது கொள்வனவு செய்யப்பட்ட சிட்டையோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிபுணர் சேவை உதவியைப் பெற்றுக்கொண்டு மின் வயரில் காணப்படும் உண்மையான அளவினை அளந்து பார்த்த போது 74 மீற்றர் நீளத்திற்காக ரூபா 1,977,502 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2.11 சேதங்கள் மற்றும் நட்டங்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 200,763,112 தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதற்காக ரூபா 196,080,674 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துகின்ற மதியுரைக் கம்பனியால் மேலே கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையில் ரூபா 6,623,624 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அக்கூடுதலான கொடுப்பனவு தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு எழுத்துமூலம் அறிவூட்டுவதற்கோ அத்தொகை மீள அறவிடுவதற்காக 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புதிய ஊடக நிலையத்தில் $700m^2$ அளவையான பரப்பளவினையுடைய கலையரங்கம் நியமங்களுக்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மதியுரைக் கம்பனியினால் 2011 நவம்பர் 02 ஆந் திகதி கட்டிடத்தைப் பொறுப்பேற்று 6 மாதங்களை விஞ்சுவதற்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும்

குறைபாடுகள் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

- புதிய கலையரங்கத்திற்கு மின்சாரம் வழங்கும் போது 3 core வயருக்குப் பதிலாக குறைந்த தரத்திலுள்ள வயர் பயன்படுத்தப்பட்டமையினால் மின்சார முறைமையை முறையாகவும் தேவையான பிரகாரமும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

- கலையரங்கத்தில் ரூபா 11,000,000 தொகை செலவிடப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட குளிரூட்டி முறைமை, மின்சாரம் மற்றும் ஒலி கட்டுப்பாட்டை வழங்கும் பிரிவிற்கான குளிரூட்டி செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அதில் உள்ள பெறுமதியான உபகரணங்களின் நீடித்த தன்மை தொடர்பில் தாக்கம் செலுத்துமென சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் இக்குறைபாடு சரி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக திணைக்களத்தினால் ரூபா 69,338 செலவு செய்து அப்பிரிவு குளிருட்டப்பட்டிருந்தது.

- கலையரங்கத்தின் மேடையின் இருபக்கமும் நிர்மாணிக்கப்பட்ட 02 விறாந்தைகளில் வலது பக்கத்திற்கு நுழைவதற்கான படிகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

- சத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்காக சுவரைப் பூர்த்தி செய்யும் பொது நியமங்களுக்கப் புறம்பாக முறையற்ற வகையில் பூர்த்தி செய்யப்பட்டமையினால் சத்தம் மேவுகை செய்யப்படாமையினால் உரிய நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- மேடையின் இருபக்க சுவர்களும் நியமங்களுக்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டமையினால் $75m^2$ இற்கு அதிகமான பகுதி கறையானின் அரிப்பிற்கு உள்ளாகியிருந்தது.

(iii) புதிய கட்டிடத்தின் அவசர வெளியேறல் கதவுகளுக்கு உரிய கொழும்பு மாநகர சபை மற்றும் பிரதான தீயணைப்பு உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்படாமலும் உரிய நியமங்களின்றியும் தயாரிக்கப்பட்ட 04 தீ பாதுகாப்பு கதவுகளுக்காக மதியுரை நிறுவனத்தின் பரிந்துரை அடிப்படையில் ரூபா 410,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது 16 கணனிகள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு கூறுவிலை கோரப்பட்டிருந்தது. அதற்காக அரச நிறுவனமொன்றினால் கணனியொன்று ரூபா 119,880 இற்கு முதலாவது குறைந்த கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அக் கூறுவிலை கொள்வனவு குழுவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமொன்று இல்லாமல் நிராகரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது குறைந்த கூறுவிலையான ரூபா 185,330 வீதம் கணனியொன்று வழங்குவதற்கு இணங்கிய நிறுவனத்தின் கூறுவிலை கொள்வனவு குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவ்விலைக்கு 16 கணனிகளை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடு போதியதாக இருக்கவில்லை. அதனால் திட்டமிட்டதன் பிரகாரம் கணனிகளை கொள்வனவு செய்யாமல் 9 கணனிகள் மாத்திரம் ரூபா 1,667,970 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. முதலாவது கூறுவிலை நிராகரிக்கப்பட்டு இரண்டாவது குறைந்த கூறுவிலையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 589,050 ஆன நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) பிரான்ஸ் அரசிடமிருந்து 2.1 சதவீத வட்டி வீதத்தின் கீழ் 04 தவணைகளில் ரூபா 102.2 மில்லியன் (9,150,000 பிரான்ஸ் பிராங்க் / 1,442,601 யூரோ) வெளிநாட்டுக் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டு Color Negative Processing இயந்திரமொன்றும் Color Positive Processing இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இவ்வியந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் முறையான சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 1999 திசெம்பர் 10 ஆந் திகதி வழங்குனர் மற்றும் தகவல் திணைக்களத்துடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவ்வியந்திரம் 2003 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பராமரிப்பின்றி விளைவற்று காணப்பட்டது.

(iii) விளைவற்றுக் காணப்படும் இயந்திரங்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பான பரிந்துரையைப் பெற்றுக்கொள்ள மூன்று நபர்களைக் கொண்ட குழு ஒன்று 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழுவினால் பகிரங்க கேள்வி கோரலின் ஊடாக விற்பனை செய்வதற்காக அமைச்சரவைக்கு பத்திரம் ஒன்றை சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 யூலை 25 ஆந் திகதி வரையில் கடன் தவணைப்பணமாக ரூபா 71,707,104 தொகையும் (யூரோ 404,590 தொகையும்) வட்டியாக ரூபா 54,650,458 (யூரோ 308,352 தொகையும்) செலுத்தப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வட்டி விகிதாசாரம் 2.1 சதவீதமாக இருந்த போதிலும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வட்டி 6.13 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 30,536,521 (யூரோ 172,295) ஆல் விஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த மிகையினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நிதிசார் நட்டம் மற்றும் தேவைப்பாடொன்று இல்லாமல் இயந்திரங்களை கொள்வனவு செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட சிக்கனமற்றதாக மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நூலகத்திற்காக 67 புத்தக இராக்கைகள் ரூபா 1,950,000 இற்கு ஒப்பந்தக்காரரொருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப்புத்தக இராக்கைகள் உரிய தரத்திற்கு புறம்பாக தயாரிக்கப்பட்டிருந்தமையால் திணைக்களத்தில் காணப்பட்ட புத்தகங்களை வைக்க முடியாமல் இருந்தது. இதனால் புத்தக இராக்கைகள் விளைவற்றுக் காணப்பட்டமை பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. அப்புத்தக இராக்கைகள் பாரத்தைத் தாங்குவதற்கு ஏற்ற வகையில் ஆதாரங்களை உபயோகித்து திணைக்களத்தினால் ரூபா 60,000 செலவு செய்து திருத்தியமைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரைக் கொண்டு அத்திருத்த வேலைகளை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதற்காக திணைக்களம் பணம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்காக ஒன்று ரூபா 105,600 வீதம் நான்கு இருக்கைகளுடன் கூடிய 08 சோபாக்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 844,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் 4 இருக்கைகளுக்குப் பதிலாக 3 இருக்கைகளுடனான சோபா தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தன. கணக்காய்வின் போது சுட்டிககாட்டப்பட்டதன் பின்னர் சோபா தொகுதியில் ஒரு இருக்கை குறைந்தமைக்காக ஒரு சோபா தொகுதிக்கு ரூபா 26,400 வீதம் மொத்தம் ரூபா 211,200 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொகையில் கழித்துக் கொள்ளப்பட்டதாக பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக 2014 யூன் 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது துருப்பிடித்திருந்தமை, மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட லெதர் உறையின் ஓரங்கள் கழன்று இருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும், திணைக்களம் அக்குறைபாடுகளை வழங்குனரைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்வதற்கு தவறியிருந்தது.

(இ) 04 இருக்கைகளுள்ள 46 நுழைவு மண்டபக் கதிரைகள் (four seater lobby chair) ஒரு தொகுதி ரூபா 29,500 வீதம் ரூபா 1,357,000 தொகைக்கு வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும், அளவீட்டுப் பட்டியல் மற்றும் மாதிரிகளுக்குப் புறம்பாக 03 இருக்கைகளுள்ள (Three seater) 09 கதிரைகள் மற்றும் 02 இருக்கைகளுள்ள (two seater) 08 கதிரைகள் என்பன மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. ஒரு இருக்கை

(lobby seat) ஒரு பகுதியாகக் கருதி 42 இருக்கைகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 973,500 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறித்த குறைபாட்டிற்காக நிறுத்தி வைக்கப்பட்ட தொகையிலிலிருந்து கழித்துக் கொள்ளப்பட்டதாக பதிலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அக்கழிப்பனவுகள் கதிரைகளின் எண்ணிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டிருந்தது. மாதிரிகளுக்குப் புறம்பாக இருந்தமைக்காக மேற்கொள்ளப்பட்ட கழிப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பொருட்களை பொறுப்பேற்பதற்கு முன்னர் குறித்த பொருட்கள் பரீட்சிக்கப்பட்டு உரிய தரத்தில் உள்ளதென உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இணங்கப்பட்ட விலையை விட கூடுதலான விலையில் அதாவது ரூபா 217,800 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த இருபத்தைந்து நூலகக் கதிரைகள் தரமற்ற வகையில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே காணப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது அச்சரிப்படுத்தல்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

.

## 2.13 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளுக்குரிய தொடர்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | **ஆண்டு** | **பந்தி** | |
| (i) | 2012 | 4(அ) | புதிய ஊடக நிலையத்தில் காணப்பட்ட தளபாடங்கள், தனியார் ஆலோசனைக் கம்பனியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | | | இணங்கப்பட்ட நியமங்கள் மற்றும் மாதிரிகளுக்குப் புறம்பாக 12 விடயங்களுக்காக ரூபா 3,522,700 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இணங்கப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக ரூபா 2,568,800 தொகையில் வழங்கப்பட்ட 03 பொருள் வகைகள் பயன்படுத்த முடியாத நிலையிலும் காணப்பட்டன. |
| (ii) | 2012 | 7(ஆ)(i) | புதிய ஊடக நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 200,763,112 இற்கு தனியார் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. உப ஒப்பந்தப் பதிவேடு, உத்தரவாதச் சான்றிதழ் (மின்சார உபகரணங்கள், குளிரூட்டி இயந்திரம், தீ பாதுகாப்பு கதவுகள்), தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள், சகல கேள்விதாரர்களினதும் கேள்வி ஆவணங்களின் திறக்கப்படாத பிரதிகள், பழைய கட்டிடத்தை இடித்து அகற்றுதல் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை போன்ற தகவல்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தமுடியாதிருந்தது. |
| (iii) | 2012 | 7(ஆ)(ii) | புதிய ஊடக நிலையத்திற்கு ரூபா 23,997,597 தொகை செலவு செய்து தனியார் நிறுவனமொன்றிடமிருந்து தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக்கம்பனியின் கேள்விக்குரிய மூலப் பிரதியோ அல்லது அதன் இணைப் பிரதியோ கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2012 | 8(அ) | திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 195,985,670 ஆன முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. 2011 யூன் 08 ஆந் திகதி அதன் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மதியுரைக் கம்பனியால் சான்றிதழும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் மதியுரைக் கம்பனியால் இனங்காணப்பட்ட குறைபாடுகளில் ஒப்பந்தக்காரரால் சில குறைபாடுகள் மாத்திரம் சரி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2012 திசெம்பர் 31 இல் இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.14 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியாகளின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 08 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 06 | 10 |
| (iii) | இரண்டாம் நிலை | 231 | 187 | 44 |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 50 | 02 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 23 | 14 | 09 |
| | மொத்தம் | 337 | 265 | 72 |

**(ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தினால் பின்வரும் உத்தியோகத்தர்கள் வேறு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர்.

| **ஊழியர் வகை** | **ஊழியர் எண்ணிக்கை** | **ஏனைய தரப்பினர்** | **காலப்பகுதி** |
|---|---|---|---|
| - | | | |
| பணிப்பாளர் நாயகம் | 01 | களனிப் பல்கலைக்கழகம் | 2010 மே 07 ஆந் திகதி 01 முதல் |
| பணிப்பாளர் | 01 | ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | 2010 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் |

**(இ) ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் திணைக்கத்தினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | ஊழியர் எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | ஊடக புலனாய்வு உத்தியோகத்தர் | 01 | மீள் குடியயேற்ற அமைச்சு | 2013 சனவரி 01 முதல் |
| (ii) | புகைப்பட நிபுணர் | 01 | சனாதிபதி செயலகம் | 2006 சனவரி 13 முதல் |
| (iii) | செயற்திட்ட செயற்படுத்தல் உதவியாளர் | 01 | தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு | 2013 ஏப்ரல் 22 முதல் |
| (iv) | செயற்திட்ட அமுலாக்கல் உதவியாளர் | 01 | கல்வி அமைச்சு | 2013 ஏப்ரல் 22 முதல் |

72 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், மேற்படி திணைக்களத்தின் 04 உத்தியோகத்தர்கள் ஏனைய அமைச்சுகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,481,294 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. தலைப்பு 211 – அரசாங்க அச்சாளர் திணைக்களம்

---

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

அரசாங்க அச்சாளர் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 28 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான

பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**3.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்க அச்சாளர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு கண்டுபிடிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

**(அ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 157,860 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டு அச்சிடுவதற்காக 2012 திசெம்பர் மாதத்தின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3,304,000 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 546,960,780 தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. அந்த நிலுவையாக இருந்த வருமானம் 1 வருடம் முதல் 25 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து இருகின்றதாகும். அந்த நிலுவை வருமானத்தை

அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் கணக்கிற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1989 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரையான 17 ஆண்டுகள் காலப்பகுதிக்குரியதும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படவேண்டி இருந்ததுமான ரூபா 132,947,049 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 546,960,780 ஆக இருந்த போதிலும், அம்மீதிகளிலிருந்து ரூபா 58,756,582 தொகை அறவிடமுடியாத கடன் மீதியாக இருந்தது.

(v) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கல்வி வெளியீட்டு திணைக்களத்திடமிருந்து ரூபா 133,322,376 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் அக்கடன் மீதியிலிருந்து ரூபா 47,480,664 தொகை தாமதக் கட்டணங்கள் மற்றும் தண்டப் பணமாக கழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளபடியான கடன் மீதி ரூபா 85,851,712 ஆக இருந்தது. 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் அக்கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 21101 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா

65,640,483 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) திணைக்களத்தினால் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண மீதிகளை காட்டும் தனியாள் கணக்கு மீதிகள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,071,832 கூட்டுத்தொகையான ஆதனக் கடன்களை அறவிடுதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(iv) முறைப்படி அடோர்னி அதிகாரத்தைக் கையேற்காமல் வழங்கப்பட்டிருந்த ஆதனக் கடன்கள் தொடர்பாக 3 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 878,786 தொகை அறவிட முடியாமல் இருந்தது.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

---

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 31,221,741 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த வெள்ளை அச்சீட்டுத் தாள்கள் இருப்பில் ரூபா 25,482,954 ஆன இருப்பொன்று 2014 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு கொள்ளாமல் கொள்வனவு மேற்கொள்ளப்படாததன் காரணமாக தாள்களின் இருப்பு கொள்வனவு செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் காணப்பட்டன. அத்தோடு இந்த இருப்பினை பயன்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 30''-80'' மற்றும் 20''-80'' வெள்ளை அச்சீட்டுத் தாள்களின் இருப்பொன்று ரூபா 28,807,510 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு 20''x30'' , 80''x40'' மற்றும் 20''x25 என தாள்களை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய தாள்கள் தேவைப்பாடு இனங்காணப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களம் 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2011 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2011 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் 757(2)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைவான காலப் பகுதியொன்றிற்காக ரூபா 10,576,176 தொகையான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது. திணைக்களத்தினால் அப் பொறுப்புக்களில் ரூபா 2,859,188 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | | |
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | 5,710,813 | 2012 ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய பெறுமதி சேர் வரிகளின் மொத்தம் ரூபா 5,710,813 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

---------------------------------------------

(i) நிதிப் பிரமாணம் 110 - திணைக்களத்தின் வாகனங்களுக்கு விபத்துக்களினால் ஏற்படும் இழப்புக்களும் சேதங்களும் தொடர்பான தகவல்கள் இழப்புத் தொடர்பான பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 104 - 2011 சனவரி 10 ஆந் திகதி திணைக்களத்தின் வாகனமொன்று விபத்திற்குட்பட்டமை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் அவ்வாகனம் திருத்தம் செய்யப்படாமல் திணைக்கள வளவில் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(iii) நிதிப் பிரமாணம் 1645(அ) - திணைக்களத்தின் குழாம் வாகனங்கள் தொடர்பாக முறைப்படி நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) அரச நிதிச் சுற்றறிக்கை

---------------------------------------

2001 மார்ச் 23 ஆந் திகதிய 369 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2008 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய எஸ்பி/ஈடி/03/08 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை - பழுதடைந்த கடதாசிகளை அகற்றும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கிழிந்த மற்றும் பழுதடைந்த கடதாசிகளை ஊழியர்களிடமிருந்து கேள்வி கோரி விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3.7 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

### (அ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

அரசாங்க அச்சாளர் திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

| | | காலப்பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|---|
| | **சீராக்கல் தொடர்பான விபரம்** | **06 மாதங்களுக்கு மேற்பட்டதும் 01 ஆண்டிற்குக் குறைவானதும்** | **01 ஆண்டிற்கு மேற்பட்டதும் 03 ஆண்டுகளுக்குக் குறைவானதும்** | **03 ஆண்டுகளுக்கு மேற்பட்டது** | **மொத்தம்** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) | தேறாத வைப்புக்கள் | - | 548,888 | 14,944 | 563,832 |
| (ii) | வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் காசோலைகள் | 21,784 | 80,111 | 1,064,902 | 1,166,757 |
| (iii) | இனங்காணப்படாத வரவுகள் | - | 4,170 | 276,942 | 281,112 |
| (iv) | இனங்காணப்படாத செலவுகள் | - | 136,650 | 15,786 | 152,436 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிக்கப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வைப்புச் செய்யப்பட்ட போதிலும் கணக்கிற்கு செலவு வைக்கப்படாத காசோலைகள்**

---

வைப்புச் செய்யப்பட்ட போதிலும் வங்கிக் கூற்றின் பிரகாரம் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாதிருந்த காசோலைகளின் பெறுமதி ரூபா 563,832 ஆக இருந்தது.

**(ஆ) இனங்காணப்படாத கொடுப்பனவுகள்**

---

02 வருடங்கள் கடந்த ரூபா 228,113 ஆன இனங்காணப்படாத கொடுப்பனவுகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக வங்கிக்கணக்கிணக்க கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 259,454 பெறுமதி 05 ஆண்டுகளை விஞ்சியிருந்தது.

**(இ) வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்**

---

வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் காலாவதியான ரூபா 1,166,757 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இனங்காணப்படாத பெறுவனவுகள்**

---

03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 15,785 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறிப்பு (Note book) தினக்குறிப்பேட்டின் உறையை தயாரித்தல் மற்றும் கட்டுதல் என்பவற்றை தனியார் நிறுவனமொன்றிடமிருந்து நிறைவேற்றிக் கொள்வதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டலின் பிரகாரம் அந்நடவடிக்கைகள் ஆகக் குறைந்தது மூன்று பேருடன் கூடிய தொழில்நுட்ப மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதற்கு பதிலாக ஒரு உத்தியோகத்தரின் பரிந்துரை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ தினக்குறிப்பு உறை (Management diary) கொள்வனவு, கடந்த ஆண்டின் அத்தினக் குறிப்பேடு உறைகளை வழங்கிய தனியார் நிறுவனத்திடமிருந்தே கொள்வனவு செய்யுமாறு ஊடக மற்றும் தகவல் அமைச்சின் செயலாளரின் கடிதத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இக்கொள்வனவு அரசின் கொள்வனவு வழிகாட்டல்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டமையால் கொள்வனவின் போட்டித் தன்மை மற்றும் வெளிப்படைதன்மையின்றி காணப்பட்டது.

(இ) எரிபொருள் கட்டளை மூலம் பெற்றுக்கொள்ளப்படும் எரிபொருள் அளவின் சரியான தன்மையை சுயாதீனமான உத்தியோகத்தரொருவரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் இருந்ததுடன், நாளின் இறுதியில் தாங்கியில் இருந்த எரிபொருள் அளவு, ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூர அளவு மற்றும் லீற்றரொன்றுக்கு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படக்கூடிய கிலோமீற்றர்களின் அளவு என்பன ஓட்டக்குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற தன்மையிலானதாக இருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்படுகின்றன.

**(அ) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளிலிருந்து விலகல்**

---

திணைக்களத்தினால் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 07 கைவிரலடையாள இயந்திரங்கள் மற்றும் தொடர்பாடல் மென்பொருட்கள் கொள்வனவிற்காக மொத்தம் ரூபா 435,000 செலுத்தப்பட்டிருந்தது. இக்கொள்வனவு முறையே 2015 யூன் 06 ஆந் திகதி மற்றும் 2015 ஒக்தோபர் 17 ஆந் திகதி அவசர கொள்வனவின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக் கொள்வனவு அரசின் வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்யப்பட்டிருந்த கைவிரலடையாள இயந்திரங்கள் சரியான நியமங்களுடன் கொள்வனவு செய்யப்பட்டதென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவ்வியந்திரங்கள் தொடர்பாக மாதிரிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அம்மாதிரிகளுடன் கொள்வனவை ஒப்பீடு செய்தலானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.12.2(1) ஆம் வழிகாட்டிக்கு முரணாக இக்கொள்வனவு இடம்பெற்றிருந்தது.

(ii) வருடாந்த கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கொள்வனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 15,385,106 தொகையான 101.221 மெற்றிக்தொன் (Bond Coloured) கடதாசி உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தின் கடதாசி தேவைப்பாடு 40 மெற்றிக்தொன் ஆக இருந்த போதிலும், வழங்குனரின் நிபந்தனையின் பேரில் 100 மெற்றிக்தொன் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் 61.121 மெற்றிக்தொன் கடதாசி இருப்புக்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டு பின்னர் எவ்வித பரிசோதனையொன்றில்லாமல் இருப்பு புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது, இக்கடதாசி இருப்பு வழங்குனரால் களஞ்சியத்திலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) தேர்தல்கள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் 60,000,000 அறிவுரைப் பத்திரங்கள் அச்சிடுவதற்காக திணைக்களத்தின் களஞ்சியத்தில் தனியார் நிறுவனமொன்றுக்குரிய கடதாசி இருப்பிலிருந்து தேவையான கடதாசிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அச்சிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2015 மே 03 ஆந் திகதி கொள்வனவுக் குழுவினால் அவசர கொள்வனவின் கீழ் 25.275 மெற்றிக்தொன் ரூபா 3,942,738 இற்கு கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அத்திகதி வரையிலும் குறித்த அச்சீட்டு செயற்பாடுகளின் 85 சதவீதமான அளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

இக்கடதாசி திணைக்களத்தினால் முதலாவது கொள்வனவின் போது ஒரு அலகு மெ.தொ ரூபா 152,000 ஆக இருந்ததுடன், இரண்டாவது கொள்வனவின் போது ஒரு மெ.தொ. ரூபா 155,994 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஒரு மெ.தொன்னிற்கு ரூபா 3,994 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்குறித்த செயற்பாட்டிற்காக கடதாசி கொள்வனவின் போது ரூபா 100,948 தொகை வழங்குனருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவசரக் கொள்வனவாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வழங்குனரால் குறித்த கடதாசியை திணைக்களத்தின் களஞ்சியத்தில் நிறுத்தி வைத்திருந்தமையால் முதலாவது கொள்வனவின் போது செலுத்தப்பட்ட விலைக்கே கடதாசி கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்திருக்கும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 1:2:1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அரசிற்கு மிகவும் சாதகமான வகையில் போட்டி விலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக திணைக்களத்தினால் அகற்றப்பட்ட கடதாசிகள் இருந்தால் விரயமாகின்றவற்றை அரச அச்சாளர் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு விற்பனை செய்வதற்கு அரச அச்சாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பழுதடைந்த மற்றும் கிழிந்த கடதாசிகளை அகற்றும் போது நேர முகாமைத்துவம் மற்றும் களஞ்சிய இட வசதிகள் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) தேசிய கடதாசி கம்பனியிடமிருந்து திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 5,949,302 தொகை 2014 மே 22 ஆந் திகதி வரையிலும்

அறவிடப்பட்டிருக்கவில்லை. 2013 ஒக்தோபர் 08 ஆந் திகதியின் பின்னர் பணத்தை அறவிடுவதற்காக நினைவூட்டலொன்று 2014 மே 22 ஆந் திகதி வரையிலும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் திணைக்களத்தினால் நிலுவையாக இருந்த அச்சீட்டுக் கட்டணத்தை அறவிடுவதற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vi) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அவசர கொள்வனவின் போது பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளுக்கு முரணாக ஊடக, தகவல் அமைச்சிற்காக 3 மாதிரி தினக் குறிப்பேடுகளை அச்சிடுவதற்காக ரூபா 2,915,427 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(vii) திணைக்களத்திற்கான சீருடைகள் கொள்வனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- திணைக்களத்திற்காக 231 மீற்றர் பொலிஸ்டர் காக்கித் துணி பெற்றுக் கொள்வதற்காக கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், ஆகக்குறைந்த கேள்வியான ரூபா 57,750 விலை புறக்கணிக்கப்பட்டு ரூபா 139,709 இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலை ஏற்றுக்கொள்ளப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கூறுவிலை கோரும் போது உரிய நிறம் மற்றும் நியமங்களுக்குரிய மாதிரிகள் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.
- குறைந்த விலையுடன் கூடிய காலணிகளின் மாதிரிகள் திருப்தியில்லை என்பதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைக்காதிருக்கும் போது ஆண்களின் காலணிக்கான குறைந்த விலையான ரூபா 1,499 தொகை மற்றும் பெண்களுக்கான காலணியின் குறைந்த விலையான ரூபா 855 தொகை என்பன புறக்கணிக்கப்பட்டு முறையே ரூபா 2,151 தொகை மற்றும் ரூபா 1,900 தொகை வீதம் கூடிய பெறுமதி அடிப்படையில் காலணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.10 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு வாகனங்களுக்குரிய 2004 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றிருந்த விபத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 95,187 ஆன நட்டத்தினை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 06 கணனி மென்பொருள் விடயங்களுக்குரிய 375 அலகுகளின் பெறுமதியை இனங்காண்பதற்காக செயற்படாமல் இருந்ததுடன், அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 772 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தின் களஞ்சியத்தினுள் மிகவும் அரிதாக விநியோகிக்கப்படும் புத்தகங்கள் மற்றும் மாதிரிப் படிவங்கள் என்பன 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விநியோகிக்க முடியாத நிலைமையில் காணப்பட்ட பல வகையான புத்தகங்களின் இருப்புக்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தமையால் களஞ்சியத்தில் இடவசதிகள் முறையாக முகாமை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தினால் 2006 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்டிருந்த தேசிய கொள்வனவு முகவராண்மைக்குரிய அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவைகள் மற்றும் கைநூல்களின் பிரதிகள் களஞ்சியப் புத்தகங்களுக்கு உள்ளடக்கப்படாமல் விநியோகப் பிரிவினால் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

(உ) களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்படாத ரூபா 11,815,560 கூட்டுத்தொகையான நிதிப் பெறுமதியுடனான புத்தக இருப்பொன்று திணைக்களத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. Legislative Enactments of the Democratic Socialist Republic of Sri Lanka என்ற புத்தகத்தின் அச்சிடப்பட்ட 20 ஆவது தொகுதிக்குரிய புத்தகங்கள் மற்றும் அப்புத்தகத்திற்குரிய பதிப்பு செய்யப்பட்ட Supplementary to the Revised Edition of the Legislative Enactments என்ற இரண்டு வகையான புத்தகங்களுக்குரிய ரூபா 10,529,400 ஆன பெறுமதியுடைய 20,056

பிரதிகளும் ரூபா 896,760 பெறுமதி அளவிலான New Law Report என்ற புத்தகத்தின் 2,491 பிரதிகளும் ரூபா 389,400 பெறுமதியான Voice From ancient Sri Lanka என்ற புத்தகத்தின் 1,770 பிரதிகளும் அதில் உள்ளடங்கயிருந்தன.

(ஊ) 2014 சனவரி 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது திணைக்களத்திற்குரிய 06 வாகனங்கள் திணைக்களத்தின் வளவில் காணப்படாதிருந்ததுடன், அச்சந்தர்ப்பத்தின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கணனி வகை அச்சீட்டு இயந்திரமொன்று, பொர்ம் பிரிண்டரொன்று, தொடர் கடித பொருட்களை வைக்கும் இயந்திரமொன்றும் அதற்குரிய 11.69 மற்றும் 13.5 அளவிலான கெசட் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவிற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 28,126,839 தொகை செலவிடப்பட்டிருந்தது. கணனி வகை அச்சீட்டு நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட கெசட் மற்றும் உதிரிப்பாகங்களிலிருந்து எவ்வித அச்சீட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இயந்திரத்திற்கு உரிய வகையில் தேவைப்படும் 11 கெசட் மற்றும் உதிரிப்பாகங்கள் 2 ½ ஆண்டுகளின் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 3,917,374 தொகை செலவு செய்து பொருத்தப்பட்டதன் பின்னர் அவ்வியந்திரம் செயற்பாட்டில் இருந்தது. அதன் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 4,853,383 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த கெசட் மற்றும் உதிரிப்பாகங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,853,383 ஆன செலவினம் விளைவற்றதாக இருந்தது.

(ஆ) அச்சீட்டு இயந்திரம், கெசட் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்கு 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது செலவிடப்பட்டிருந்த மொத்தப் பணம் ரூபா 42,044,213 ஆக இருந்த போதிலும், 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் ரூபா 220,000 தொகையான 2 கணனி அச்சீட்டுக் கட்டளைகள் மாத்திரம் கிடைக்கப்

பெற்றிருந்தமையால் கூடுதலான காலம் அவ்வியந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது. அவ்வாறே அவ்வியந்திரம் செயற்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இணைக்கப்பட்டிருந்த ஊழியர்களின் கூடுதலான காலப்பகுதியும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.12 முகாமைத்துவ பலவீனங்கள்

திணைக்களத்தின் வாகனங்களின் கட்டுப்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக 6 மாதங்களுக்கு ஒருமுறை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனங்களிலிருந்து கழற்றி அகற்றும் பகுதிகள் களஞ்சியத்திற்கு கையளிக்கும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்திற்குச் சொந்தமான குழாம் வாகனங்கள் தொடர்பாக நளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 09 | 28 |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 03 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,236 | 732 | 504 |
| (iv) | ஆரம்ப நிலை | 664 | 512 | 152 |
| | மொத்தம் | 1,945 | 1,256 | 689 |